குற்றம் சாட்டப்பட்டவர் வாக்குமூலம் அளிக்கக் கட்டுப்பட்டவர் அல்ல என்றும், அவ்வாறு செய்தால், அது அவருக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தப்படலாம் என்றும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நடுவர் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு முன், விளக்க வேண்டும் என்று பாரதிய மக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023, பிரிவு 183 (2)- கட்டாயப்படுத்துகின்றது. அவ்வாறு செய்யவில்லை என்றாலும், வாக்குமூலம் தொடர்புடையது என்று இந்தப் பிரிவு அறிவிக்கின்றது.

**வேறுவிதமாக தொடர்புடையதாக இருந்தால்:**

- அதிகாரம் உள்ள ஒருவரின் தூண்டுதல், அச்சுறுத்தல், வலுக்கட்டாயம் அல்லது வாக்குறுதியின் விளைவாகும் செய்யப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தொடர்புடையதல்ல என்று பிரிவு 22 குறிப்பிடுகின்றது.
- காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் பொருத்தமற்றது என்று பிரிவு 23 கூறுகின்றது.
- மேலும், காவல் துறை காவலில் உள்ள ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் அறிக்கையை, ஒரு நடுவர் தவிர வேறு எந்த நபரும் பதிவு செய்ய முடியாது என்று பிரிவு 23 விலக்குகின்றது.

பிரிவு 22, அல்லது பிரிவு 23-ஆல் ஒப்புதல் வாக்குமூலம் விலக்கப்படாவிட்டால்,

- அது ரகசியம் காக்கும் வாக்குறுதி அல்லது ஏமாற்றுதல், அல்லது குடிபோதையில் இருக்கும் போது செய்தது, அல்லது தேவையில்லாத கேள்விக்கு பதிலாகக் கொடுத்தது, அல்லது எச்சரிக்கை இல்லாமல் வாக்குமூலம் பெற்றது, போன்ற காரணங்களால் அது விலக்கப்படாமல், அவருக்கு எதிராக ஆதாரமாக பயன்படுத்தப்படும்.

**தாக்டு எதிர் மகாராஷ்டிரா மாநிலம்: உச்ச நீதிமன்றம் (Dagdu vs State Of Maharashtra; 1977 AIR 1579):**

- ஒப்புதல் வாக்குமூலத்தைச் சுற்றியுள்ள பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக, ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை அல்லது தன்னிச்சையாகக் (voluntary) கொடுத்தது குறித்து சந்தேகம் தோன்றினால், நீதிமன்றம் ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியங்களில் ஏற்றுக் கொண்டாலும், அதன் அடிப்படையில் செயல்பட மறுக்கலாம்.

***பிரிவு 23. காவல் அதிகாரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் (Confession to Police officer)***

*(1) ஒரு காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம், எந்தவொரு குற்றத்திற்கும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிராக நிரூபிக்கப்படக் கூடாது.*

*(2) ஒரு காவல்துறை அதிகாரியின் பாதுகாவலில் இருக்கும் போது (custody of a police-officer) எந்தவொரு நபராலும் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம்,*

- *அது ஒரு நீதிமன்ற நடுவரின் நேரடியான முன்னிலையில் (immediate presence) செய்யப்பட்டால் தவிர, அத்தகைய நபருக்கு எதிராக நிரூபிக்கப்படக் கூடாது.*

*வரம்புரையாக, காவல்துறை அதிகாரியின் பாதுகாவலில் இருக்கும் போது (in the custody of a police officer),*

- *எந்தவொரு குற்றத்திற்காகவும், குற்றம் சாட்டப்பட்ட (accused of any offence) ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்,*
- *எந்தவொரு பொருண்மை கண்டுபிடிக்கப்பட்டால் (when any fact is deposed to as discovered inconsequence of information received),*
    - *அந்த அளவு தகவல்கள், அவை ஒப்புதல் வாக்குமூலமாக இருந்தாலும், இல்லையென்றாலும், அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மையுடன் தெளிவாக தொடர்புடையவற்றை (relates distinctly to the fact thereby discovered) நிரூபிக்கலாம்.*

**சட்டங்களின் ஒப்பீடு**

இந்திய சாட்சியச் சட்டம், 1872-ன் பிரிவுகள் 25, 26 மற்றும் 27 ஆகையவை மாற்றமில்லாமல் இணைக்கப்பட்டு, இச்சட்டத்தில் பிரிவு 23 என ஒரே பிரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**சட்டப் பிரிவு என்ன சொல்கின்றது:**

இந்தப் பிரிவு இரண்டு துணைப்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

- முதல் துணைப்பிரிவின்படி, காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம், எந்தவொரு குற்றத்திற்கும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிராக நிரூபிக்கப்படக் கூடாது.
- இரண்டாம் துணைப்பிரிவு, ஒரு காவல்துறை அதிகாரியின் காவலில் இருக்கும் போது, கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பான விதிகளைத் தருகின்றது.

**1. குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்கு மூலம்**

எந்தவொரு குற்றத்திற்கும், குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிராக காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் நிரூபிக்கப்படக் கூடாது.

இந்தப் பிரிவின் வரம்புரையாக அனுமதிக்கப்பட்டதைத் தவிர, ஒரு காவல்துறை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலம் சாட்சியங்களில் அனுமதிக்கப்படாது. இந்தப் பிரிவின் நோக்கம், குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறுவதற்காக, காவல்துறையினர் சித்திரவதை செய்வதைத் தடுப்பதாகும்.

**காவல்துறை அதிகாரி:** சாட்சியச் சட்டத்தின் 23 வது பிரிவில் காணப்படும் "காவல்துறை அதிகாரி" என்ற சொற்கள் ஒரு குறுகிய வழியில் அல்லாது பரந்த மற்றும் பிரபலமான அர்த்தத்தில் கருதப்பட வேண்டும். ஆனால், இந்த வார்த்தைகள் காவல்துறையினரால் பயன்படுத்தப்படும், சில அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பட்ட நபர்களைக் கூட "காவல்துறை அதிகாரி" என்ற வரையறைக்குள் கொண்டுவரக் கூடாது.

**உச்ச நீதிமன்றம்: டோபன் சிங் எதிர் தமிழ்நாடு மாநிலம் (Tofan Singh v. State of Tamil Nadu: 2020 SCC OnLine SC 882):** இந்திய சாட்சியச் சட்டத்தின் 25வது பிரிவின் (இச்சட்டத்தின் 23 வது பிரிவு) பொருளில், ஒரு அதிகாரி, ஒரு காவல்துறை அதிகாரியாகக் கருதப்பட பின் வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

i. குற்றவியல் நடைமுறைச் சட்ட பிரிவு 173 இன் கீழ், (பாரதிய மக்கள் பாதுகாப்புச் சட்டம், –2023ல் பிரிவு 193) ஒரு காவல்துறை அறிக்கையை தாக்கல் செய்யும் அதிகாரத்தை உள்ளடக்கிய காவல்துறை அதிகாரியின் அனைத்து அதிகாரங்களும் அந்த அதிகாரிக்கு இருக்க வேண்டும்.

ii. ஒரு காவல்துறை அறிக்கையை தாக்கல் செய்யும் அதிகாரம், ஒரு காவல்துறை அதிகாரியின் அதிகாரத்தின் இன்றியமையாத அங்கமாகும்.

iii. அவ்வாறு காவல்துறை அறிக்கையை தாக்கல் செய்வதற்கான அதிகாரம் சட்டத்தால் வழங்கப்பட வேண்டும்.

**பஞ்சாப் மாநிலம் எதிர் பர்கத் ராம்** (State of Punjab vs Barkat Ram: 1962 3 SCR 338) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் பிரிவு 25 இன் (இச்சட்டத்தின் 23 வது பிரிவு) நோக்கத்திற்காக சுங்க அதிகாரிகள் காவல்துறை அதிகாரிகள் அல்ல என்று தீர்ப்பளித்துள்ளது.

**காணொளிப் பதிவு (Video): முனிகிருஷ்ணா @ கிருஷ்ணா எதிர் மாநிலம் (Munikrishna @ Krishna Etc. Vs State: 2022 Live law SC 12)** என்ற வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் அறிக்கை காணொளிப் பதிவாக பதிவு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது.

- விசாரணை நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் இரண்டும் குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் அறிக்கைகளை மற்றும் அவர்களின் காணொளிப் பதிவு (Video) அறிக்கைகளை ஏற்றுக் கொண்டது முற்றிலும் தவறாகி விட்டது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 20 உட்பிரிவு 3 –ன் கீழ், குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, அவருக்கு எதிரான சாட்சியாக இருக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது. மேலும், இந்திய சாட்சியச் சட்டம், 1872 இன் பிரிவு 25 –ன் கீழ், (இச்சட்டத்தின் 23 வது பிரிவு) குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவல்துறை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலத்தை ஆதாரமாக ஏற்க முடியாது.

**நீதிமன்ற நடுவர் (Magistrate) முன் ஒப்புதல் வாக்குமூலம்**

அவர் குற்றச்சாட்டுக்குரிய அறிக்கையை வெளியிட்ட போது, அவர் காவல்துறையின் காவலில் இருந்தார் என்றாலும், ஒரு நீதிமன்ற நடுவர் (Magistrate) முன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால், அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியமாக நிரூபிக்கலாம்.

நடுவர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கப்படுவதால், வாக்குமூலம் கொடுக்கும் நபர் சுதந்திரமாக, மற்றும் தன்னிச்சையாக, காவல்துறையின் கட்டுப்பாடின்றி, அச்சமின்றி ஒரு அறிக்கையை வெளியிடுவதற்கான வாய்ப்பு உள்ளது.

**காவலில் இருக்கும் போது:** இச்சட்டத்தின் பிரிவு 23, ஒரு காவல்துறை அதிகாரியின் காவலில் (custody of a police officer) ஏதேனும் குற்றம் சாட்டப்பட்ட நபர் செய்யும் ஒப்புதல் அறிக்கை பற்றி பேசுகின்றது. ‘கைது’ என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

'காவல்' மற்றும் 'கைது' ('Custody' and 'Arrest') என்பது ஒத்த சொற்கள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது சந்தேகிக்கப்படும் நபர், ஒரு காவல்துறை அதிகாரியின் கைகளில் கிடைத்தவுடன், ஒருவர் காவல்துறை காவலில் இருப்பதாகக் கூறலாம்.

ஆனால், கைது என்பது ஒருவரை முறைப்படி காவல்துறை காவலில் எடுக்கும் முறை. ஒவ்வொரு கைது (arrest) நடவடிக்கையிலும் காவல் (custody) உள்ளடங்கி இருக்கின்றது. ஆனால் காவலில் (custody) உள்ள நபர் சில சந்தர்ப்பங்களில் கைது செய்யப்படலாம் அல்லது சுதந்திரமாக விடப்படலாம்.

ஒரு நபரைக் கைது செய்ய அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரியிடம்,

- கைது செய்யப்படாமல் அவரது காவலில் இருக்கும் போது,
- ஏதேனும் குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரால், ஒரு அறிக்கை வெளியிடப்படுகின்றது என்றாலும் கூட இந்தப் பிரிவுப் பொருந்தும்.

**முறையான கைது தேவையில்லை: ஒரிசா உயர் நீதிமன்றம் – பரம்ஹன்சா ஜாதாப் எதிர் மாநிலம் (Paramhansa Jadab vs The State: AIR 1964 Ori 144):**

- சாட்சியச் சட்டத்தின் பிரிவு 26 இன் (இச்சட்டத்தின் 23 வது பிரிவு) நோக்கத்திற்காக "காவல்துறை காவல்" (Police custody) என்பது, குற்றம் சாட்டப்பட்டவர் முறையாக கைது செய்யப்படும் போது மட்டுமே தொடங்குவதில்லை, ஆனால் அவரது இயக்கங்கள் தடை செய்யப்பட்டு (movements restricted), ஒருவித நேரடி அல்லது மறைமுக காவல்துறை கண்காணிப்பில் வைக்கப்படும் தருணத்திலிருந்து தொடங்கும்.

**விதிவிலக்கு: ஒரு பொருண்மை கண்டறியப்பட்டால்.**

பிரிவு 23-ன் பொதுவிதிக்கு இப்பிரிவின் வரம்புரை, ஒரு விதிவிலக்கை அனுமதிக்கின்றது. சில நிபந்தனைகளுடன் அதை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்கின்றது.

இந்திய சாட்சியச் சட்டம், 1872-ன் பிரிவு 27-ல் கூறப்பட்ட விதி மாற்றமில்லாமல், இங்கே வரம்புரையாக கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின்படி,

- ஒரு காவல்துறை அதிகாரியின் காவலில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவரின் ஒரு அறிக்கையில் ஒரு தகவல் தருகின்றார்.
- அது ஒரு பொருண்மையை (fact) கண்டுபிடிப்பதற்கு வழிவகுக்கின்றது.
- அது குற்றத்துடன் தொடர்புடையது.
- அவ்வாறானால், அது ஒப்புதல் வாக்குமூலமா அல்லது இல்லையா என்ற கேள்வியைப் பொருட்படுத்தாமல், தொடர்புடைய தகவலை நிரூபிக்கலாம்.

<u>எடுத்துக்காட்டு:</u> பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள குற்றவாளியின் அறிக்கையின் அடிப்படையில், குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தி மீட்கப்பட்டது என்றால் குற்றவாளி கத்தியைக் குறித்து கூறியனவற்றை நிரூபிக்கலாம்.

இப்பிரிவின் கீழ் ஒரு அறிக்கையை நிரூபிக்க வேண்டுமானால்,

- குற்றம் சாட்டப்பட்டவர் அறிக்கையில் அளித்த தகவல்களின் நேரடி விளைவாக, ஒரு பொருண்மை கண்டறியப்பட்டிருக்க வேண்டும்.
- கொடுக்கப்பட்ட தகவல்களில், அத்தகைய ஒரு பொருண்மையைக் கண்டறிய உதவிய பகுதி மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக ஏற்றுக்கொள்ளத்தக்கது.
- பொருண்மையை கண்டுபிடிப்பது, சில குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.
- தகவல் கிடைத்த நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர், காவல்துறை காவலில் இருக்க வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டால், காவல்துறை அதிகாரி முன்னிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் செய்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள தடை இல்லை.

மிக முக்கியமான நிபந்தனை என்னவென்றால், “பொருண்மையுடன் தெளிவாக" தொடர்புடைய "இவ்வளவு தகவல்கள்" (relates distinctly to the fact thereby discovered) மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கது. அவை அல்லாத தகவல்களை விலக்க வேண்டும்.

இந்த விதிவிலக்குக்குக் காரணம், குற்றம் சாட்டப்பட்டவர் அளித்த தகவல்களின் விளைவாக, ஒரு பொருண்மை (fact) உண்மை (true) எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த அறிக்கையின் அந்தப் பகுதி உண்மை என்றாகின்றது. எனவே அப்பகுதி மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அறிக்கையின் மற்ற பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

**உச்ச நீதிமன்றம்: பெருமாள் ராஜா @ பெருமாள் எதிர் மாநிலம் :பிரதிநிதி. காவல் ஆய்வாளர் (Perumal Raja @ Perumal Vs. State Rep. By The Inspector Of Police: 2024 INSC 13)**

- சாட்சியச் சட்டத்தின் பிரிவு 27, (இச்சட்டத்தின் பிரிவு 23) அடுத்தடுத்த நிகழ்வுகளால் உறுதிப்படுத்தப்படும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. கொடுக்கப்பட்ட தகவலின் விளைவாக ஒரு பொருண்மை உண்மை எனக் கண்டுபிடிக்கப்பட்டது, மற்றும் அதன் விளைவாக ஒரு பொருள் மீட்கப்படுகிறது. எனவே கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் மீட்பு என்பது குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கொடுத்த தகவலை நம்பலாம் என்பதற்கான உத்தரவாதமாகும்.
- இந்த பிரிவை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்ட மற்றும் அவசியமான முதல் நிபந்தனை, ஒரு குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் விளைவாக பொருத்தமான பொருண்மையாக இருக்க வேண்டிய ஒரு உண்மையைக் கண்டுபிடிப்பதாகும்.
- இரண்டாவது, அத்தகைய பொருண்மையின் கண்டுபிடிப்பு குறித்து வாக்குமூலம் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். காவல்துறையினருக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு பொருண்மை என்றால், இந்த நிபந்தனையை பூர்த்தி செய்யபடவில்லை.
- மூன்றாவதாக, தகவல் பெறும் போது, குற்றம் சாட்டப்பட்டவர் போலீஸ் காவலில் இருக்க வேண்டும்.